R 4759 (page 44)

# நிழல்களாக மெல்க்கிசேதேக்கும் ஆரோனும்

## MELCHISEDEC AND AARON AS TYPES

உண்மையில் பிரதான ஆசாரியராக ஒரே ஒரு ஆசாரியரே இருந்தார். உதவி ஆசாரியர்கள் பிரதான ஆசாரியனுக்கு வெறும் பிரதிநிதிகளாக மட்டுமே இருந்தனர். மகா ஆசாரியராகிய இயேசுவுடன் எதிர்காலத்தில் இதே போல இருக்கும். கர்த்தர் தலையானவராகவும் உதவி ஆசாரியர்கள் அவரது அங்கங்களாகவும் 'திரள் கூட்டத்தார்" இந்த மகா ஆசாரியருக்கு ஊழியர்களாகவும் இருப்பார்கள்.

உலகத்திற்கான தேவனுடைய வேலை எதிர்காலத்திற்கு உரியது. ஆசாரியத்துவத்தையும், மகா ஆசாரியர், அவரது அங்கங்கள் மற்றும் அவரது ஊழியக்காரர்களுக்கு மேசியாவின் ஆயிர வருட அரசாட்சியில் மனுக்குலத்திற்கு போதித்து, சுகப்படுத்தி உயர்த்துகிற வேலைக்காக தகுதியை வழங்குகிற வேலை நிறைவடையும்.

சுவிசேஷ யுகத்தில் தலையும் மற்றும் அங்கங்களாகிய மகா ஆசாரியர் தயாராவதற்கு, அவர்களது பலி அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறேன்." தலையானவரின் பலி பிரியமானதாக இருந்தது. ஏனெனில் அவர் பூரணராயிருந்தார். பின்னர் அவர் சமர்ப்பித்த, அவரது அங்கங்களின் பலிகள் அனைத்தும் இதே போல பிதாவானவருக்கு பிரியமானதாக இருக்கின்றன. ஏனெனில் பிரதான ஆசாரியரின் பலியின் புண்ணியம் மற்ற பலிகளுக்கு சாட்டப்படுகின்றன.

### ஆரோனின் ஆசாரித்துவம் மெல்க்கிசேதேக்கின் ஆசாரித்துவத்திலிருந்து மாறுபட்டது

வேத வாக்கியங்களில் ஆரோன் மற்றும் மெல்க்கிசேதேக்கின் ஆசாரித்துவம் என்று இரண்டு ஆசாரித்துவம் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டுமே தலையாகிய கிறிஸ்துவையும் அவரது சரீரத்தையும் நிழலாக காட்டுகின்றன. ஆரோனின் ஆசாரியத்துவம் பலியை மட்டும் சித்தரித்து, மகிமை மற்றும் ஆளுகையைப் பற்றி ஒன்றும் கூறுவதில்லை. அவரது ஆடை மட்டுமே அதை அடையாளப்படுத்துகிறது. மெல்க்கிசேதக்கின் ஆசாரியத்துவம், கிறிஸ்து மற்றும் அவரது சரீர அங்கங்கள் அனைவரின் பலியும் முடிந்த பிறகு வரும் எதிர்காலத்துக்குரியதை மட்டுமே குறிப்பிடுகிறது.

இந்த இரண்டு கருத்துக்களிலிருந்து ஆசாரியரின் வேலை பார்க்கப்பட வேண்டும். ஒரு அர்த்தத்தில் அவரது பலி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் அவரது எதிர்கால வேலை எல்லாம் இந்த பலிகளை அடிப்படையாக கொண்டே இருக்கிறது. ஆனால் இன்னொரு அர்த்தத்தில் பலிகளையெல்லாம் எதிர்காலத்தில் வரப்போகிற மாபெரும் வேலைக்கு வெறும் ஒரு முன்னேற்பாடாகும். முதலாவது ஆசாரியன், ஆசாரிய வேலைக்கும் மகிமைக்கும் உயர்த்தப்பட பாத்திரவானாக ஆவதற்கு பலியை கொடுக்க வேண்டும். இரண்டாவதாக அந்த பலியின் புண்ணியத்தை பெற வேண்டும். அதன்மூலம் உலகத்தின்

பாவங்களுக்காக நீதிக்கான பாவ நிவர்த்தி செய்ய வேண்டும். அதன் மூலம் அவர் மகிமையடைந்த ஆசாரியனாக, தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் மத்தியஸ்தராக நிற்பதற்குரிய முழு உரிமையை பெறக்கூடும். அவர் சிங்காசனத்தில் ஒரு ஆசாரியராக, மெல்க்கிசேதேக்காக அவரது ஆயிர வருட யுக ராஜ்யத்தில் மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிப்பார்.

மேசியா, மெல்க்கிசேதேக்கின் முறைமையின்படிதான் ஒரு ஆசாரியர் என்றும் ஆரோனின் முறைமையின்படி அல்ல என்றும் அப்போஸ்தலர் அறிவிக்கிறார். (எபிரேயர் 7:21) ஏனெனில் அவர் பூமியில் இருந்தால், ஆசாரியராக இருக்க முடியாது. ஏனெனில் இயேசு, லேவியின் கோத்திரத்தில் பிறக்காமல், யூதாவின் கோத்திரத்தில் பிறந்திருந்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரிய ஊழியம் என்றென்றைக்குமாக ஆரோனுக்கும் அவனது குமாரர்களுக்கும் மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆரோனும் அவனது குமாரர்களும் மேசியாவின் ஆசாரியத்துவத்திற்கு முன்னேற்பாடான அம்சத்தை, பலியின் முன்னேற்பாட்டை நிழலாக காண்பிக்கிறார்கள். ஆகையால் ஆசாரியராக மேசியாவின் உரிமைகோரல் ஆரோனின் ஆசாரித்துவத்தின்படியல்ல. ஏனெனில் வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: "நீர் மெல்க்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலும் இருப்பார்." (சங்கீதம் 110:4; எபிரேயர் 7:20) இங்கே ஆசாரியராக குறிப்பிடப்பட்டது சுவிசேஷ யுகத்தின் முடிவில் தலையும் சரீரம் சேர்ந்த மகிமையடைந்த மேசியாவையாகும். அப்பொழுது அர்ப்பணமும் பலியிடுவதும் முடிவடைந்து உலகின் மனுக்குலத்திற்கு ஊழியம் செய்யும் மகிமையின் ஆசாரிய ஊழியம் ஆரம்பமாகும்.

---